Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 275

வெள்ளிக்கிழமை
29 ஒகஸ்ட் 2025

ஆவணி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு அச்சுறுத்தல்!

ஐ.நா. அதிருப்தி

விரிவு பக்:- 11

எல்லை நிர்ணயக்குழு நியமிக்கப்பட்டால்

# மாகாணசபைத் தேர்தல் 3 ஆண்டுகள் தாமதமாகும்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒகஸ்ட் 29**

**எல்லை நிர்ணய ஆணைக்குழு மீண்டும் நியமிக்கப்படும் பட்சத்தில், மாகாண சபைத் தேர்தல் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்குப் பிற்போகும் நிலை ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

11

வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய

## பாதாளக் குழுவினர் கைதுசெய்யப்படுவர்!

கொழும்பு, ஓக. 29
பாதாளக் குழுவினருக்கு தற்போது அரசியற் பாதுகாப்புக் கிடைக்காததாலேயே வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ளனர். அவர்களைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ்மா

11

ஆயுதக்குழுக்களுடன் தொடர்புடைய

## அரசியல்வாதிகள் விசாரிக்கப்படுவர்!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

கொழும்பு, ஓக. 29
ஆயுதக் குழுக்களுடன் தொடர்பைப் பேணிய அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.
அரசாங்கத்

11

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம்

## வெள்ளை அறிக்கைகளை வெளியிடவேண்டும் அரசு

மக்கள் பேரவை இயக்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 29
புதியபயங்கரவாதத்தடைச் சட்ட வரைவு தொடர்பாக அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்த 'வெள்ளை அறிக்கைகளை' உடனடியாக வெளியிடவேண்டும் என்று மக்கள் பேரவை இயக்கம் வலியுறுத்தியுள்ளது.
புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான வெள்ளை அறிக்கையை

11

செம்மணிப் புதைகுழியில்

## 8 என்புத்தொகுதிகள் நேற்று அடையாளம்!

யாழ்ப்பாணம், ஓக. 29
அரியாலை செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்று மேலும் எட்டு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
அரியாலை செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின்

11

*41,000 பிராங்க் திருட்டு*

## கைதான அனைவருக்கும் விளக்கமறியல் உத்தரவு!

யாழ்ப்பாணம், ஓக. 29
வடமராட்சி அல்வாய் பகுதியைச் சேர்ந்த சுவிஸ் பிரஜையிடம் இருந்து, 41 ஆயிரம் பிராங்கை (இலங்கை மதிப்பில் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம்) திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.
அல்வாய் கிழக்கு, அத்தாயைச் சேர்ந்த சுவிஸ் பிரஜை

11



கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

## சான்றுப்பொருள்களை மக்கள் அடையாளம் காண நடவடிக்கை

நீதிமன்றத்தில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 29
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களை பொதுமக்கள் அடையாளம் காணும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்

11

முச்சந்தி முரளி

'வெல்லுவம் எண்டு தெரிஞ்சா மட்டும் தான் உவையள் தேர்தலை நடத்துவினம் கண்டியளோ'

## யாழ்.நகர்ப் பகுதியில் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 29
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மட்டக்களப்பைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை ரமேஷ் (வயது-35) என்பவரே

11

## கடுமையான காயங்களுடன் மூதாட்டியின் சடலம் மீட்பு!

மூங்கிலாறில் கோரம்

முல்லைத்தீவு, ஓக. 29
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறுப் பகுதியில், மூதாட்டியொருவர் கடுமையான காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

11



பொருண்மியத்தில் நலிவுற்ற

## 111 இணையர்களுக்கு சந்நிதியில் திருமணம்!

யாழ்ப்பாணம், ஓக. 29
பொருண்மியத்தில் நலிவுற்ற நிலையில் இருந்த 111 இணையர்களுக்கு, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்றுத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர்வாழ் துரை சுமதினி

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 28.08.2025 | 4177 | D | 10 66 69 79 | விசேட எழுத்து D |
| ஹந்தஹான ராசி சுப பலன் | 28.08.2025 | 1244 | | 16 28 37 46 | வெற்றி இலக்கினம் சிம்மம் |
| NLB ஜய | 28.08.2025 | 0203 | J | 1 6 7 4 | |
| மெகா பவர் | 28.08.2025 | 2283 | O | 02 68 76 77 | சுப்பர் இலக்கம் 14 |
| மஹஜன சம்பத | 28.08.2025 | 5935 | S | 9 0 0 0 8 8 | |
| தன நிதானய | 28.08.2025 | 1965 | G | 09 17 53 72 | விசேட எழுத்து G |
| அத சம்பத | 28.08.2025 | 0510 | S | 0 0 8 8 | |
| சுப தவசக் | 28.08.2025 | 0051 | | 03 12 15 46 | வெற்றி இலக்கினம் தனுசு |

| DLB லொத்தர் | திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் / வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | மேலதிக |
|---|---|---|---|---|---|---|
| சுபிரி தன சம்பத | 28.08.2025 | வியாழக்கிழமை | 0643 | U | 9 2 3 3 1 6 | |
| Super Ball | 28.08.2025 | வியாழக்கிழமை | 2909 | V | 01 23 64 67 | |
| சனிதா | 28.08.2025 | வியாழக்கிழமை | 5070 | N | 04 50 70 71 | |
| SASIRI | 28.08.2025 | வியாழக்கிழமை | 0757 | | 22 47 48 | |
| லக்ன ராசி | 28.08.2025 | வியாழக்கிழமை | 4621 | | 02 17 22 34 | மிதுனம் |
| KAPRUKA | 28.08.2025 | வியாழக்கிழமை | 2085 | J | 44 46 53 61 | சுப்பர் இலக்கம் 19 |
| அத கோடிபதி | 28.08.2025 | வியாழக்கிழமை | 2735 | G | 29 33 38 45 | |

யாழ். மாவட்டத்தில் உள்ள

# ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

## பொதுநிர்வாக அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.29**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர் போன்றவற்றுக்கான ஆளணி வெற்றிடங்கள் அரசாங்கத்தால் நிரப்பப்படும் என்று பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபயரட்ண தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தின் தேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது. உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபயரட்ண, அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார, மேலதிகச் செயலாளர் நிஷாந்த, யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், மாவட்டச் செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே உள்ளூராட்சி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் இயற்கை வளங்கள் உள்ளன. வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது நிலவசதி பற்றாக்குறையாகவுள்ளது. ஆகையால் இருக்கின்ற நில வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தவேண்டும். அதன் மூலமே உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியை இந்த ஆண்டுக்குள் முழுமையாகப் பயன்படுத்துவதைச் சவாலாக ஏற்றுச் செயற்படுத்தவேண்டும். இனம், மதம், மொழி கடந்து சகோதரத்துவத்துடன் நாட்டின் வளர்ச்சிக்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும் -என்றார்.

கூட்டத்தில் மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் முன்வைத்த கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஏ-27)

# தேர்தல் அறிவிப்பு வந்தால் எதிரணிக்கூட்டு உடையும்!

*அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.29

தேர்தல் அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டால் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவின் உறுதிப்பாட்டை விளங்கிக்கொள்ளலாம். ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் ஊழல்வாதிகள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளனர் என்று அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதியை மோசடி செய்தார், உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துக்கு அவர் பொறுப்புக்கூறவேண்டும் என்று கடந்த காலங்களில் அவர்மீது குற்றஞ்சாட்டியவர்கள் இப்போது ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்று கூறுகின்றனர். எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு அரசாங்கத்துக்குச் சவால் அல்ல.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும், எவருக்கும் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படக்கூடாது. சுயாதீன விசாரணைகளுக்கு அமையவே நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படுகின்றது. நீதிமன்றத்தின் உத்தரவைக் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக விமர்சிப்பது முறையற்றது - என்றார். (ஏ-இ)

கச்சதீவு தொடர்பில்

# விஜய் தெரிவித்த கருத்துகளை கணக்கெடுக்கத் தேவையில்லை!

*வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஓக.29

கச்சதீவு விவகாரம் தொடர்பான இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு மாறவில்லை. அதை இலங்கை விட்டுக்கொடுக்கப்போவதும் இல்லை. எனவே, விஜயின் கருத்தைக் கவனத்தில் எடுக்கவேண்டிய தில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கச்சதீவை மீளப்பெறவேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் கூறியுள்ளமை தொடர்பில் அங்கு எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கச்சதீவு இலங்கைக்குரிய தீவாகும். இந்த விடயத்தில் மாற்றம் இல்லை. தமிழகத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, வாக்கு வேட்டைக்காக கச்சதீவு பற்றிப் பேசலாம். அவ்வாறு பேசுவதால் மாற்றம் வரப்போவதில்லை. எனவே, விஜயின் அறிவிப்புத் தொடர்பாக அலட்டிக்கொள்ளவேண்டியதில்லை.

இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு மாறவில்லை. எக்காரணம் கொண்டும் கச்சதீவு இந்தியாவுக்கு வழங்கப்படமாட்டாது. அது இலங்கைக்குரியது - என்றார். (ஏ-44)

# கொலைகளுக்குப் பின்னால் மறைமுகமான சக்திகள்

## ரவி செனவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 29

நாட்டில் இடம்பெறும் சில கொலைகளின் பின்னணியில் மறைமுக சக்திகள் உள்ளன. அது தொடர்பில் தீவிரமான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இடம்பெறும் கொலைச்சம்பவங்கள் தனிப்பட்ட விடயம் அல்ல. அதன் பின்னணியில் மறைமுக சக்திகள் உள்ளன. எனவே குற்றச் செயல்களை கட்டுப்படுத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விசேட திட்டமொன்றை வகுத்தார்.

குற்றவாளிகள் தலைமறைவாகி இருப்பதாகக் கூறப்படும் நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை பலப்படுத்தினார். குறிப்பாக இந்தியா, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளுடன் அவர் இராஜதந்திர ரீதியாக சிறந்த தொடர்புகளைப் பேணி வந்தார். இதன் விளைவாகவே இந்தோனேசியாவில் வைத்து குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்துவிட்ட உயிர்களைத் தவிர மிகுதி அனைத்தையும் தருவோம்!

### அமைச்சர் அபயரத்தன தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.29**

**வடக்கு மக்கள் இழந்த உயிர்களைத்தவிர அனைத்தையும் நாம் மீளவும் தருவோம் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் எச்.எம்.எச்.அபயரத்தன தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணசபையால் கோரப்படும் நிதி 2026ஆம் ஆண்டுக்குள் விடுவிக்கப்படும். கடந்த காலத்தில் இந்த மக்கள் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் நாம் மீளவும் தருவோம். இங்கே ஏனைய மத்திய அமைச்சுகளுடன் தொடர்புடைய சில தேவைப்பாடுகளும் சுட்டிக் காட்டப்பட்டன. அதுதொடர்பில் தொடர்புடைய அமைச்சுகள் ஊடாகக் கலந்துரையாடுவதற்கு ஏதுவான ஒழுங்குகள் செய்துதரப்படும். அதேபோல நிரந்தர நியமனங்களுக்காக விசேட அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குசெய்யப்படும்.

புதிய உள்ளூராட்சிமன்றங்களை உருவாக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்கின்றீர்கள். சபைகளின் வருமானத்தில் 20 சதவீதம் சம்பளமாக வழங்கவேண்டிய நிலையில் புதிதாக உருவாக்கப்படும் சபைகளால் அது முடியுமா? அந்தப் பிரதேசத்தின் மக்கள் தொகை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கவனத்திலெடுக்க வேண்டும்.

அதேநேரம் சபைகளின் தரங்களை உயர்த்துவது, புதிய கட்டடங்கள் தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியுடன் சமர்ப்பியுங்கள் - என்றார். (எ-இ)

## இலங்கைக் குற்றக்கும்பல் இந்தோனேசியாவில் கைது

கொழும்பு, ஓக.29

இலங்கையின் ஒரு பெரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பலைச் சேர்ந்த ஐந்து பேர் இந்தோனேசியப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


கைது செய்யப்பட்ட குழுவில் கொமாண்டோ சாலிந்த, பாணந்துறை நிலங்க, பெக்கோ சமன் மற்றும் தெம்பிலி லஹிரு ஆகிய பெயர்களில் அழைக்கப்படும் பாதாள உலகக்குழு நபர்கள் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் கணகாணிப்பாளருமான எப்.யு.வுட்லர் தெரிவித்தார். (ச-44)

## இளைஞர் குத்திக்கொலை; மூவருக்கு மரணதண்டனை

கொழும்பு, ஓக.29

30 வயது இளைஞர் ஒருவரைக் கத்தியால் குத்திக்கொன்ற குற்றத்துக்காக, மூன்று பேருக்குத் தங்காலை மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க நேற்று மரணதண்டனை விதித்துள்ளார்.

14 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து, கத்தியால் ஒருவரைக் கொன்ற குற்றத்தில் கைதுசெய்யப்பட்ட மூவருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## 457 அரசு நிறுவனங்களில் ஊழல் முறைகேடுகள்!

### விசாரணை துரிதம்

கொழும்பு, ஓக.29

457 அரசு நிறுவனங்களின் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தப் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவான கோப் குழு முடிவு செய்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, அந்த 457 நிறுவனங்களின் கணக்காய்வு அறிக்கைகளை விரைவாகப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோப் குழுவின் தலைவர் நிஷாந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில், கோப் குழுவால் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான நிறுவனங்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டன, மேலும் சில நிறுவனங்கள் தவிர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. அதிக ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் நடந்த நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவற்றை விரைவில் குழுவின் முன் வரவழைத்து விசாரணை நடத்தப்படவுள்ளது. (ச-இ)

## பொது இடங்களில் வெற்றிலைத் துப்பல்; இனிச் சட்டம் பாயும்!

கொழும்பு, ஓக.29

வெற்றிலை உண்டு பொது இடங்களில் எச்சில் உமிழும் நபர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கும் பணியை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் பஸ் தரிப்பிடங்கள், பொது இடங்கள் என அனைத்துப் பகுதிகளிலும் வெற்றிலை எச்சில்களை அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. இந்த விடயத்தில் எவ்வித நடவடிக்கைகளும் கடந்தகாலத்தில் எடுக்கப்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் பொது இடங்களில் வெற்றிலை மென்று எச்சில் உமிழ்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

வெற்றிலை எச்சிலைப் பொது இடங்களில் உமிழும் நபர்களுக்கு எதிராக குறைந்தபட்சம் 3 ஆயிரம் ரூபாவும் அதிகபட்சமாக 25 ஆயிரம் ரூபாவும் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## சும்மாவோ இருக்கினம்?

ஒருமாதிரி தபால் ஊழியர்களின்ர போராட்டம் முடிவுக்கு வந்திட்டுது. "மரியாதையா வேலைக்கு வரோனும், இல்லாட்டி சம்பளத்தை வெட்டுவம், வேலையை விட்டு நிப்பாட்டுவம் எண்டெல்லாம் வெருட்டின அரசாங்கம், இப்ப அவையின்ர மூண்டு கோரிக்கையளை உடனடியாச் செய்யிறம் எண்டும், மிச்சக் கோரிக்கைகளை அடுத்த பட்ஜெட்டில போட்டு நிறைவேற்றுறம் எண்டும் இறங்கி வந்ததாலதான் போராட்டமும் முடிவுக்கு வந்தது. எப்பவும் நியாயமுள்ள போராட்டம் வெல்லத்தானே வேணும். அப்பிடித்தான் இதுவும்.

எல்லாருக்கும் அரசாங்க வேலை எண்டாலே 'ஐஸ்' அடிச்சுப்போட்டு சம்பளத்தை வாங்கிக்கொண்டு போறவை எண்ட நினைப்புத்தான் இருக்குது. ஆனால் எல்லாரும் அப்பிடியில்லை. அதிலையும் இந்தத் தபால் ஊழியர் மாரின்ர பாடு பெரும்பாடு. மழை எண்டாலோ, வெயில் எண்டாலோ, சண்டை எண்டாலோ, இடம்பெயர்வு எண்டாலோ உந்த போஸ்ட்மன் வேலை பாக்கிறவை வீடுவாசலில நிக்கமுடியாது. சண்டைக்காலத்தில குண்டு விழேக்க கூட, கடிதத்தை வீடுகளுக்குக் கொண்டுபோய் குடுத்த போஸ்ட்மன்மாரும் இருக்கினம். ஆனால் அவையைச் சமூகம் பெரிசா மதிக்கிறேலை. 'பியோன்' எண்டு ஏதோ தங்கட எடுபிடியள் மாதிரித்தான் கூப்பிடுவினம். ஆனால் உண்மையில இந்தப் 'பியோன்' மார்தான் அவைக்கு இக்கட்டான காலத்திலை எல்லாம் கடவுளா இருந்தவை. முக்கியமா யாழ்ப்பாணத்துக்குத் தரைவழிப்பாதை பூட்டுப்பட்டு இருக்கேக்க, ரெலிபோன் இல்லாக் காலத்தில வெளியுலகத்தை எங்களோட இணைச்சதும், வெளிநாட்டில அனுப்பிற கடிதங்களையும், காசையும் கொண்டந்து சேர்த்து எங்களையெல்லாம் உயிரோட இருக்கவைச்சதும் இதே பியோன்மார்தான். அதையெல்லாம் பிறகு எங்கட ஆக்கள் நினைச்சுப் பாக்கிறேலை. "நாங்கள் இது செய்தம், அது செய்தம் " எண்டு தபால் ஊழியர்மாரும் பெருமை பேசுறேலை.

கடிதங்களைக் குடுக்கிறது காலைமையில, தபால்பெட்டிக்குள்ள போடுற கடிதங்களை எடுத்து உரிய இடங்களுக்கு அனுப்பிறது பின்னேரத்தில. அதால இடைப்பட்ட நேரத்தில அவை கொஞ்சம் வேலையில்லாமல் இருக்கிறதைப் பார்த்திட்டு "உந்தப் பியோன்மார் எப்ப பார்த்தாலும் சும்மா தான் இருக்கினம்" எண்டுவாய்கூசாமல் கதைப்பினம். ஆனால் உண்மை என்னெண்டால் மற்றவை நாள் முழுக்கச் செய்யிற வேலையை போஸ்ட்மன்மார் கொஞ்ச நேரத்திலையே செய்திடுவினம். அதை ஸ்மார்ட் வேர்க் எண்டு வெள்ளைக்காரர் சொல்லுவினம். நாள்முழுக்க சைக்கிள் உழக்கித்தான், கடிதம் குடுத்தாலென்ன, தபால் பெட்டிக்குள்ள இருக்கிற கடிதங்களை எடுத்தாலென்ன. அப்பிடி ஊர்முழுக்க எப்பவும் சைக்கிளோட மல்லுக்கட்டுற இந்த போஸ்ட்மன்மாருக்குத்தான் உண்மையில மோட்டார் சைக்கிள் குடுத்திருக்கோனும். ஆனால் மற்ற திணைக்களங்களில இருக்கிற பீல்ட் ஒப்பீஸர்மாருக்கு மோட்டார் சைக்கிளைக் குடுத்திட்டு, இவைக்குக் குடுக்காமல் மஹிந்த காலத்திலையும் இவையளுக்கு ஏமாற்றம்தான். இப்ப என்னெண்டால் , இந்தத் தபால் திணைக்களத்துக்கு புதிசா ஆக்களைச் சேர்க்காமல், தற்காலிகமா வேலை செய்யிறவையையும் நிரந்தரமாக்காமல் அந்தத்துறையையே ஒழுங்கா வேலை செய்யவிடாமல் வைச்சிருக்குதுகள் அரசாங்கங்கள். ஆக்கள் இருந்தால் தானே அலுவல் நடக்கும்? அதை விட்டிட்டு அஞ்சுரூபாவுக்குக் குதிரையும் வேணும், ஆறுகடக்கப் பாயவும் வேணும் எண்டால் தபால் திணைக்களக்காரரும் எப்படித்தான் சமாளிக்கமுடியும்? அதாலதான் இப்பிடிப் போராடி ஓரளவுக்கு எண்டாலும் வெண்டிட்டினம். இப்ப அரசாங்கம் வெறும் வாக்குறுதி மட்டும் தான் குடுத்திருக்கு. அதுகளை நிறைவேற்றினால்தான் முழுவெற்றி கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சு முடியும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக்காரியங்கள் அனுகூலமாக முடியும். பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொள்ளநேரிடும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் சில பிரச் சினைகளும் அலுவலகத்தில் ஏற்படக்கூடும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது. போட்டிகளைச் சமாளிக்க வேண்டி வரும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குத் தாய்மாமன் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தை வழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள்.. வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் இழுபறி நிலை மாறும்.


**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மன உறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத்தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.



## 8

எண் 8 (8, 17, 26) இல் பிறந்தவர்கள் நீதி நேர்மைக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள்.
எப்பேர்பட்ட அவசரமான காரியமாக இருந்தாலும் மிகவும் நிதானமாகவே செய்வார்கள். நிதானமே இவர்களின் பிரதானமாக இருக்கும். தங்கள் கஷ்டங்களைப் பிறரிடம் சொல்லி உதவி கேட்கமாட்டார்கள். இவர்களும் தன்னால் முடிந்த உதவியை மட்டும் தான் பிறருக்கு செய்வார்கள். எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் இருக்கும். கடமையே பிரதானமாகக் கொண்ட இவர்களுக்கு வாழ்வில் எவ்வளவு சோதனைகள் நேர்ந்தாலும் வேதனையடைய மாட்டார்கள். எந்தக் காரியங்களை எடுத்துக் கொண்டாலும் இருவிதங்களில் ஆதாயம் அடையக்கூடிய ஆற்றல் இவர்களுக்கு உண்டு. எப்போதும் கவலை தோய்ந்த முகத்துடன் ஆழ்ந்தை சிந்தனை செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் பேச்சில் அழுத்தம் திருத்தமும், நிதானமும், உறுதியும் இருக்கும்.

எதிலும் பிரதிபலன் பாராது உழைத்திடும் இவர்கள் தெய்வத்தைக்கூட உழைப்பிற்கு அடுத்தபடியாகத்தான் நினைப்பார்கள். நினைத்ததை விடாத பிடிவாதக்காரர் என்றாலும் வீண் பிடிவாதக்காரர் இல்லை. வீண் பேச்சிலும், வெட்டிப் பேச்சிலும் ஈடுபடமாட்டார். பிறர் தம்மீது கொண்டுள்ள தவறான அபிப்பிராயங்களுக்கு செவிசாய்க்கமாட்டார். சிரிக்க, சிரிக்க பேசும் சுபாவம் கொண்ட இவர்களுக்கு, மற்றவர்களைக் குலுங்க குலுங்கச் சிரிக்க வைக்கக்கூடிய ஆற்றலும் உண்டு. சொன்ன சொல் தவறாத குணம் இருக்கும் பிறர் வாழ்க்கையில் எந்தவகையிலும் குறுக்கிடாத உயந்த பண்பும், இலட்சியமும் கொண்டவர்களாக இருப்பார்கள்.

தெய்வநம்பிக்கை இவர்களிடம் தீவிரமாகவே உண்டு. ஒன்று கடவுளே இல்லை. என்று வாதிடுவார்கள். அல்லது கடவுளே கதி! என்று இறைவனை நம்புவார்கள். தங்கள் நல்லதென்று நினைத்து, எடுத்துச்செய்கின்ற காரியங்களை எவ்வளவு எதிர்ப்புகளும் தடைகளும் வந்தாலும், அவைகளைப பற்றிக் கவலைப் படாமல் செய்து முடிக்கும் வலிமை இவர்களுக்கு உண்டு. ஓரளவு பிடிவாதக் குணம் நிறைந்தவர்கள். இவர்கள் மேற்பார்வைக்குக் கடின மனமும் பிடிவாதமும் உடையவராகத் தோன்றினாலும், சமூகத்தில் பாதிக்கப்பட்டோரைக் கண்டால், அவர்களை ஆதரித்து வாழ்க்கையளிக்கத் தயங்க மாட்டார்கள்.

**குடும்ப வாழ்க்கை :** எட்டாம் எண்ணில் பிறந்தவர்க ளின் குடும்ப வாழ்க்கை சிறப்பாகவே இருக்கும். குடும்பத்தின்மீது அதிக அக்கறை உடையவர்களாக இருப்பார்கள். காதல் விவகாரங்களில் ஈடுபட்டாலும் இவர்களுக்கு அவ்வளவு எளிதில் வெற்றி கிடைப்பதில்லை. தன்னுடைய முயற்சி தவறு எனத் தெரிந்தவுடன் ச்சீ இந்தப் பழம் புளிக்கும் என நழுவி விடுவார்கள். வாழ்வில் சுக துக்கங்கள் மாறிமாறி வந்தாலும் எதையும் சமாளிக்கக் கூடிய ஆற்றல் இருக்கும். இவர்களுக்கு வாய்க்கும் வாழ்க்கைத் துணை மிகவும் சிக்கனமானவராகவும் எதிர்த்து பேசாத குணசாலியாகவும் இருப்பார். கணவன், மனைவி இருவரும் எப்போதும் இணை பிரியாது ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

**பொருளாதாரம் :** எட்டாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு தேவைக்கேற்றபடி பணவசதியும் உண்டாகி கொண்டே இருக்கும். தங்களுடைய சுக வாழ்க்கைக்காக இவர்களது வருமானம் முழுவதும் செலவழியும். தாமே சுயமாக உழைத்து பூமி, வீடு, வாகனம் முதலியவற்றை அமைத்துக் கொள்வார்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறமாட்டார்கள்.

**தொழில்:** எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் மிக கடினமான வேலைகளையும் மிக எளிதில் செய்து முடிப்பார்கள்.

**அதிர்ஷ்ட திகதி - 8,17,26, அதிர்ஷ்ட நிறம் - கறுப்பு, நீலம், அதிர்ஷ்ட திசை - தெற்கு, அதிர்ஷ்ட கிழமை - சனி, புதன், அதிர்ஷ்ட கல் - நீலம், அதிர்ஷ்ட தெய்வம் -ஐயப்பன்**

# நல்லூரில் தவறவிட்ட பொருள்களைப் பெறுக

யாழ்ப்பாணம், ஓக.29
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய 2025 ஆம் ஆண்டு வருடாந்தப் பெருந்திருவிழாக் காலத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்டு உற்சவக் காலப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட பொருள்கள் தற்போது மாநகரசபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
அவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரத்துடன் அடையாளத்தை உறுதிப்படுத்தி மாநகரசபையின் நிர்வாகக்கிளையின் அலுவலக நாள்களில் அலுவலக நேரத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 27 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

35 ஆண்டுகளின் பின்னர்

# கட்டுவன் முத்துமாரிக்கு மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.29
கட்டுவன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.
இராணுவ முகாம் உட்பகுதியிலுள்ள குறித்த ஆலயத்துக்கு மக்களின் தொடர் முயற்சியின் பயனாக 35 ஆண்டுகளின் பின்னர் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

சொல்வது தெளிந்து சொல்
செய்வது துணிந்து செய்.

மகாகவி பாரதி

# வடக்கிலும் நடக்குமா வேட்டை?

இலங்கையில் குற்றங்களை ஒழுங்கமைத்த குற்றக் கும்பல்களின் தலைவர்கள் ஐவர் இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இந்தோனேசியத் தலை நகரில், அந்த நாட்டுப் பொலிஸாருடனும், சர்வதேசப் பொலிஸாருடனும் இணைந்து இலங்கைப் பொலிஸார் மேற்கொண்டுள்ள இந்தக் கைது நடவடிக்கை போதைப்பொருள் ஒழிப்பு விடயத்திலும், குற்றங்களைக் கட்டுப்படுத்துதலிலும் ஒரு பாய்ச்சல் எனக் கொள்ளலாம். கடந்த காலங்களில் அரசியல் குற்றவியல் கூட்டிணைப்பு பொதுமக்கள் பாதுகாப்பைப் பெரிதும் சீரழித்திருந்தநிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்தக் கைது நடவடிக்கை பாராட்டத்தக்கதே.

இந்தக் கைது நடவடிக்கையின் பின்னர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறியிருக்கும் கருத்தும் கவனிக்கத்தக்கது. 'ஒழுங்கமைக் கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான சிறப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டு விசாரணைகள், தண்டனைகள் துரிதப்படுத்தப்படும்' என்று அவர் கூறியிருக்கின்றார். விரைவாக விசாரணை நடத்தி தண்டனைகள் வழங்கும் சிறப்பு நீதிமன்றம், சமூகத்தில் குற்றத் தடுப்பை வலுப்படுத்தும். அதுவே குற்றக்கும்பல் களுக்கு வலுவான எச்சரிக்கையாக அமையும். அதே நேரம், வெளிநாடுகளில் இருந்து குற்றச்செயல்களை இயக்குவோரைக் கைதுசெய்வதால் மட்டும் நாட்டுக்குள் குற்றச்செயல்கள் முற்றிலுமாகக் குறைந்துவிடப்போவதில்லை. நாட்டுக்குள் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை - போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை இனங்கண்டு அவர் களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதும் அவசியமானது. வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் குற்றவாளிகளை இனங்கண்டு, கைதுசெய்யும் அதேநேரத்தில் நாட்டுக் குள்ளும் குற்றச்செயல்களில் ஈடுபடு வோரையும் -போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடு வோரையும் வேரோடு சாய்க்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. அவ்வாறான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின் றனவா என்று ஆராய்ந்தால், பதில் திருப்தியற்றதாகவே இருக்கும். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஹெரோய்ன், ஐஸ், கஞ்சா போன்ற போதைப்பொருள் கள் இளையோர்களின் கைகளுக்கு தாராளமாகச் செல்கின்றன. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கை வியாபித்துள்ள போதைப்பொருளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்ட காலமாக இருந்தாலும், அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக இல்லை.

வடக்கில் தலைவிரித்தாடும் போதைப்பொருள் வியாபாரம், இளையோரின் எதிர்காலத்தை ஆபத்தில் தள்ளியிருக்கும்நிலையில் அரசாங்கம் என்ற ரீதியில் கரிசனை செலுத்தவேண்டிய கட்டாயம் திசைகாட் டியினருக்கு இருக்கின்றது. வடக்கில் போதைப் பொருள் பாவனை, வியாபாரம் தொடர்பாகக் கைது கள் நடந்தாலும், அவை பெரும்பாலும் சிறிய விற்பனை யாளர்கள் அல்லது பாவனையாளர்கள் மீதானவையே. ஆனால் உண்மையான சூத்திரதாரிகள் போதைப் பொருள் வலைப்பின்னலின் மூலமான மாபியாச்சிலந்தி கள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பித்துக் கொண்டே இருக்கின்றனர். வடக்கில் போதைப் பொருள் பிரச்சினையின் நீட்சிக்கு அதுவே காரண மாக இருக்கின்றது. போதைப்பொருள் வியாபாரத்தின் மூலம் இளைய தலைமுறையை அடிமைப்படுத்தும் சூத்திரதாரிகளைக் கண்டறிந்து, அவர்களை நீதி மன்றத்தின்முன் நிறுத்தாவிட்டால் ஒருபோதுமே போதைப்பொருள் பாவனையை ஒழிக்கமுடியாது. போதைப்பொருள் பாவனை என்பது வடக்கில் பெரும் சமூகப் பிரச்சினையாக மாறியிருக்கும்நிலையில், வெளிநாடுகளில் உள்ள குற்றவாளிகளைத் தேடிப் பிடிப்பதில் அரசாங்கம் காட்டும் தீவிரத்தை, வடக்கு மாகாண இளையோரின் வாழ்வை நாசமாக்கும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு எதிராகவும் அரசாங்கம் காட்டவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க அரசு நடவடிக்கை

**கொழும்பு, ஓக.29**
**சட்டவிரோத, பதிவுசெய்யப்படாத மற்றும் ஒழுங்குப டுத்தப்படாத மீன்பிடியைத் தடுப்பதற்காக வங்காள விரிகுடாப் பிராந்தியச் செயற்பாட்டுத் திட்டத்தை முன் னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அழிந்துவரும் மீன்வளங்களை மீள்நிலைக்குக் கொண்டுவரல் மற் றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
சட்டவிரோத, பதிவுசெய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்ப டாத மீன்பிடியைத் தடுத்தல், ஊக்கு விக்காதிருத்தல் மற்றும் இல்லா தொழிப்பதற்கான சர்வதேச செயற் பாட்டுத்திட்டம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உறுப்பு நாடுகளால் 2001ஆம் ஆண்டு ஏகமனதாக ஏற்றக்கொள்ளப்பட் டது. இலங்கையும் அதற்காக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.
அத்துடன், பிராந்திய சட்டவிரோத, பதிவுசெய்யப்படாத மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தப்படாத மீன்பிடி தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வங்காள விரி குடாப் பிராந்தியச் செயற்பாட்டு வேலைத்திட்டத்தில் கையொப்பமிடு வதற்கு உறுப்புநாடுகள் உடன்பட் டுள்ளன.
இந்தப் பிராந்தியச் செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங் கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

# கொழும்பு நிலப்பெறுமதி கணிசமாக அதிகரிப்பு

கொழும்பு, ஓக.29
இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட புள்ளிவிவரங் களின்படி, 2025ஆம் ஆண்டின் முதற்பாதியில் கொழும்பு மாவட்ட நில பெறுமதிகள் கணிசமாக உயர்ந்துள்ளன. கடந்த ஆண்டின் இதேகாலத்து டன் ஒப்பிடுகையில் நிலப் பெறுமதிக் குறியீடு 11.4 சதவீதம் அதிகரித்துள்ளது. குடியிருப்பு, வர்த்தக மற் றும் தொழிற்துறை என மூன்று பிரிவுகளும் பெறு மதி அதிகரிப்புக்கு பங்க ளித்துள்ளன. குடியிருப்பு நிலப் பெறுமதியே அதிகள வில் உயர்ந்துள்ளது. அது 14.4 சதவீத உயர்வைக் காட்டிய நிலையில், வர்த் தக நிலப்பெறுமதி 11.5 சத வீதமும், தொழிற்றுறை நிலப்பெறுமதி 8.4 சதவீத மும் அதிகரித்துள்ளன என்று மத்திய வங்கியின் புள்ளிவிவரத்துறை தெரி வித்துள்ளது. (எ-இ)

# 24 மணிநேரத்தில் 4,907 பேர் கைது

கொழும்பு, ஓக.29
நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 4 ஆயிரத்து 907 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது. பொலிஸ் அதி காரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக் கையை மேற்கொண்டுள்ள னர். (ச-இ)



# போதைப்பொருள் தம்பதி கைது

ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 25 வயதுடைய சந்தேக நபரும், அவரின் 20 வயதான கர்ப்பிணி மனை வியுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்த 50 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 50 கிராம் ஹெரோய்ன் என் பன கைப்பற்றப்பட்டன. (ச-இ)



# பாணந்துறையில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஓக.29
பாணந்துறையில் - வந்துரமுல்ல அலுபோகஹவத்தைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுப் பிரயோகத்தில், ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இரு வரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட் டுத் தப்பிச்சென்றுள்ளனர்.
துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உல கக்குழு உறுப்பினர் ஒருவரின் மாமனார் எனத் தெரியவந்துள் ளதாகப் பொலிஸார் தெரிவித்த னர். (ச-இ)

நாளை
சனிக்கிழமை - ஆவணி 14
30.08.2025
சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம் : 09.05 - 10.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலங்களைப் பொறுப்பேற்குக!

யாழ்ப்பாணம், ஓக.29
வீதியில் மயங்கிவிழுந்து கிடந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நடராஜா (வயது-71) என்பவர் சிகிச்சையின்போது 15.02.2025 இல் மரணமடைந்தார். இவரது சடலத்துக்கு இதுவரை எவரும் உரிமை கோராத நிலையில் உறவினர்களை அடையாளம் காண உதவுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 24.07.2025 அன்று மன்னார் பொலிஸ் பிரிவிலிருந்து சேர்க்கப்பட்டு 24.07.2025 அன்று இறந்த ஆணின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டள்ளது. குறித்த சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டி பொறுப்பேற்குமாறும் யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-25)

# வீதித்தடை

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வீதிகளில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதால் அந்த வீதிகளில் நேற்று முதல் எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதி வரை வீதித்தடை ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அதன்படி இடுகாடு வீதிப்புனரமைப்பு யாழ்.பிரதம தபாலகச் சந்தியிலிருந்து தொலைத்தொடர்பு நிலையச் சந்தி வரையும், மூத்த விநாயகர் வீதி, முடிவுப் பகுதியிலுள்ள பாலம் ஆகியவற்றின் திருத்த வேலைகள் மூத்த விநாயகர் கோவில் வீதி மற்றும் ஆசிர்வாதப்பர் வீதி இணையும் சந்திவரையும், முருகமூர்த்தி பெரிய தம்பிரான் இணைப்புப் பாலத்தின் கட்டுமானப்பணிகள் முருகமூர்த்தி வீதி தொடக்கம் பெரிய தம்பிரான் வீதிச் சந்தி வரைக்கும் என 3 பகுதிகளாக திருத்த வேலைகள் இடம்பெறவுள்ளன. எனவே அந்த வீதிகளைப் பயன்படுத்துவோர் போக்குவரத்துக்காக மாற்றுப்பாதையைப் பயன்படுத்துமாறு மாநகரசபை அறிவித்துள்ளது. (ச-25)

# மாணவர்களின் மனநிலைக்கு வீட்டுத்தோட்டங்களே ஒத்தடம்!

## ஐங்கரநேசன் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக.29

**மாணவர்களின் மனோநிலையில் ஆரோக்கியமான மாற்றங்களை வீட்டுத்தோட்டங்கள் உண்டுபண்ணும். வீட்டுத்தோட்டங்கள் மாணவர்களுக்கு உளவியல் ரீதியான ஒத்தடங்களைத் தருகின்றன என்பதைப் பெற்றோர் புரிந்துகொண்டு அவர்களை வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட அனுமதிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
விதைகளில் முளைவிடுவது தொடங்கி, நாற்றாக நிமிர்ந்து, செடிகொடியாக உயர்ந்து பூத்துக் காய்க்கின்ற ஒவ்வொரு பருவமும் அவற்றை அவதானிக்கும் மாணவர்களின் மனோநிலையில் ஆரோக்கியமான மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன.

பாடசாலைகளில் பயிர்த்தோட்டங்கள் அமைப்பதற்குக் கல்வியமைச்சும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு உதவிகளைச் செய்துவருகின்றன.

பெரும்பாலான பாடசாலைகளில் விவசாயத்தை ஒரு பாடமாகப் பயிலுகின்ற மாணவர்களே இதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதேபோன்றே வீட்டுத்தோட்டப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கும் விவசாயப் பாடம் கற்கின்ற மாணவர்களே அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இது தவறாகும். பாடசாலைத் தோட்டமோ அல்லது வீட்டுத்தோட்டமோ எல்லா மாணவர்களும் பங்கேற்கவேண்டும். இவை விவசாயப் பாடம் கற்கின்ற மாணவர்களுக்கானது என்ற மனோநிலை மாறவேண்டும்.

வீடுகளில் மாணவர்கள் கற்கும்போது நேர அட்டவணை போட்டு அதன்படிதான் படிக்கவேண்டும் எனப் பெற்றோர் வற்புறுத்துவதுகூடப் பிழையானது என்று உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இவை ஏற்படுத்தும் மனஅழுத்தங்களிலிருந்து விடுபடும் ஒரு வழியாகவே மாணவர்கள் தவறான பாதைக்குச் செல்கிறார்கள். வீட்டுத்தோட்டங்கள் தேவையான மரக்கறி வகைகளைக் குறைந்த செலவில் தருவனவோ அல்லது நஞ்சற்ற உணவைத் தருவனவோ மாத்திரமல்ல. வீட்டுத்தோட்டங்கள் மாணவர்களுக்கு உளவியல் ரீதியான ஒத்தடங்களைத் தருகின்றன என்பதைப் பெற்றோர் புரிந்து கொண்டு அவர்களை வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட அனுமதிக்கவேண்டும் - என்றார். (ச-41-66-27)



# கைத்தொழில்மேம்படுத்தல்; சபைகளை நிறுவ ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக.29
மாவட்டக் கைத்தொழில் மேம்படுத்தல் சபையை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட மேலதிக செயலர் க.சிவகரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நுண், சிறிய, நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

அவர்களின் தொழில் முயற்சிகளை இலகுவாக்கும் நோக்கில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின்கீழ் வடமாகாணப் பிரதம செயலாளர் மற்றும் மாவட்டச் செயலரின் இணைத் தலைமையில் மாவட்டக்கைத்தொழில் மேம்படுத்தல் சபை அமைப்பை உருவாக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது அமைப்பின் கட்டமைப்பு, செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் குறித்து வடமாகாணப் பிராந்தியக் கைத்தொழிற்றுறைப் பணிப்பாளர் தர்மேந்திராவால் விளக்கமளிக்கப்பட்டது. (ச-41-66)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தேர்த்திருவிழா மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. விநாயகப்பெருமான் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ சித்திரத்தேரில் வீதியுலா வந்தார். (ச-41-66)

# சிறாட்டிக்குளத்தில் நீர் வழங்கல் திட்டம்

முல்லைத்தீவு, ஓக.29
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம் சமூக நீர் வழங்கல் திட்டம் நேற்று வியாழக்கிழமை மக்களுக்குக் கையளிக்கப்பட்டது. நீர் வழங்கல் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் ரூபா செலவில் இந்த நீர் வழங்கல் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன், மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் ம.சர்மிலி, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பொறுப்பாளர், சிறாட்டிக்குளம் அ.த.க. பாடசாலை அதிபர், சிறாட்டிக்குளம் பிரதேச கிராம அலுவலர் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25)



# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவுப் பண்பாட்டு ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம் ஓக.29
யாழ்ப்பாணம் விஞ்ஞானச்சங்கமும் சமூக விஞ்ஞானப்பிரிவும் செயற்றிறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சர்வதேச நினைவுப் பண்பாட்டு ஆய்வு மாநாடும் நாடக ஆற்றுகைகளும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. 'தமிழ் அரங்கு' மற்றும் 'கலைகளின் சமகால வெளிப்பாடுகள்' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'பஞ்சவர்ணநரியார்' 'கூடிவிளையாடுபாப்பா' மற்றும் 'எந்தையும் தாயும்' ஆகிய நாடக ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளன. (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளை அரசு வலுப்படுத்தவேண்டும்

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.29**

**அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் வாயிலாக மீறக்கூடாது. மாறாக அபிவிருத்தியைக் காத்திரமாக்கவேண்டும் என வலி. கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சிமன்றங்களின் ஆளணி வெற்றிடம் நாட்டின் பிறபாகங்களைக்காட்டிலும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துக்காணப்படுகின்றது. தொழிலாளர்களின் பிரச்சினை என்றவகையில் இந்த அரசாங்கம்கூடிய கவனம் எடுக்க வேண்டும். தற்போது மத்திய அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இந்த வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப்பரப்பில் வருகின்ற விடயங்களுக்கான செயற்பாடுகளுக்கு ஏனைய அமைச்சுகளுக்கு நிதியை ஒதுக்கி அதன் வாயிலாக மத்திய அரசாங்கத்தின் நிர்வாக அலுவலகமான பிரதேச செயலக வாயிலாக நிதிகள் ஒதுக்கப்பட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்களின் பகிரப்பட்ட அதிகாரங்கள் மீறப்படாது மாகாணசபை முறைமை ஊடாக, உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நிதியை ஒதுக்கவேண்டும். கிளீன் சிறிலங்காத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் மீறப்படுகின்றன. உள்ளூராட்சிமன்றங்கள் முகாமை செய்யும் பஸ்தரிப்பிடங்களின் முடிவுகளைக்கூட மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தினர் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். அதிகாரப்பகிர்வு மற்றும் மனித உரிமைகள் பேணப்படுவதுகூட அபிவிருத்தியின் ஓர் அங்கமாகும். எனவே அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் வாயிலாக மீறக்கூடாது- என்றார். (ச)



# கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா, மைதானம் திறப்பு


கிளிநொச்சி, ஓக.29

கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வலைப்பந்தாட்ட மைதானம் மற்றும் சிறுவர் பூங்காவின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், 55 ஆவது காலாட்படைப் பிரிவின் தளபதி பொது அதிகாரி மேஜர் ஜெனரல் டபிள்யூ. எம்.ஏ.பி. விஜேகோன், கிளிநொச்சி வடக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.கம்சவத்தினி, கண்டாவளைப் பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன், தருமபுரம் மத்திய கல்லூரி முதல்வர் கே. இந்திரகாந்தி, நன்கொடையாளர்கள், பாடசாலை அதிபர் இ.கயமுகன், ஆசிரியர்கள், பெற்றோர் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)



நீர்வேலி வாய்க்கால் தரவை விநாயகர் ஆலயத்தில் ஆவணி சதுர்த்தித் திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்புப் பூஜை வழிபாடுகளுடன் இடம்பெற்றது. (25.17)



மட்டுவில் மத்தி கிராம அலுவலர் பிரிவில் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பிரதேச ஆயுள்வேத அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராமமட்ட உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற முகாமில் கைதடி சித்த வைத்தியசாலை ஆயுள்வேத வைத்தியர்கள் மற்றும் சமூக மருத்துவ உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,9)




# வவுனியாவில் உறவுகளைத் தேடி 3111ஆவது நாள் போராட்டம்!

வவுனியா, ஓக.29


வடக்கு-கிழக்குத் தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தினர் 3111 ஆவது நாளாக நேற்றுமுன்தினம் காலை கவனவீர்ப்பு ஊர்வலத்தை முன்னெடுத்தனர்.

அவர்கள் வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். வவுனியா கந்தசாமி கோவிலில் தேங்காய் உடைத்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மணிக்கூட்டுச் சந்தி வழியாக ஏ-9 வீதியை அடைந்து போராட்டப்பந்தலை வந்தடைந்தது. (ச-110)



மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நூற்றுக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலில் நேற்று வியாழக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-25,17)





# யாழ்.இ.போ.ச.சாலைக்கு 2 பஸ்கள் மீளிணைப்பு!

யாழ்ப்பாணம், ஓக.29

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் யாழ்ப்பாணம் சாலைக்கு இரண்டு குளிரூட்டப்பட்ட பேருந்துகள் மீள் பயன்பாட்டுக்குத் திருத்தப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் குறித்த இரண்டு பேருந்துகளும் நேற்று முன்தினம் அமைச்சர்களால் நாடாவெட்டி மக்கள் பயன்பாட்டுக்கு மீளக் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சிறீபவானந்தராஜா, இலங்கைப் போக்குவரத்துச்சபை துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அறநீதி இலக்கியமும் கருத்துநிலையும்’ நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.29

ந.அருள்மொழிச்செல்வனின் ‘அறநீதி இலக்கியமும் கருத்துநிலையும்’ நூல் வெளியீடு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ம. ரகுநாதன், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஷ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சிறப்பு விருந்தினர்க ளாக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஒட்டுண்ணியல்துறை பேராசிரியர் செல்வம் கண்ணதாசன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.முன்னாள் நகரபிதா சிரேஷ்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.கிருஷ்ணேந்திரன், சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி அதிபர் கணேசமூர்த்தி சுலபாமதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

**பொது அறிவித்தல்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**உள்ளூராட்சி வார நிகழ்ச்சித்திட்டம் - 2025**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் இருக்கின்ற பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து உள்ளூராட்சி மன்றத்தின் சேவைகள் சார்ந்த கருப்பொருளில் பின்வரும் தலைப்பின் கீழ் போட்டிக்கான விண்ணப்பங்கள் திறந்த அடிப்படையில் கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் எதிர்வரும் 2025.09.04 முதல் 2025.09.09 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று 2025.09.15 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

* **குறுந்திரைப்படவாக்கம் ( 3-5 நிமிடங்கள் )**
* **தனிநடிப்பு ( 3 நிமிடங்கள் )**
* **வில்லுப்பாட்டு ( 10 நிமிடங்கள் )**
* **கவிதையாக்கம் ( 3 நிமிடங்கள் )**

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை** 26.08.2025

(CR/45934) J-1

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 80 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 110 ரூபா

தொடர்பு: **077 334 1281**

(CS 30464) E

**காணி வாடகைக்கு தேவை**

**பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் வியாபாரம் செய்வதற்கு வெறும் காணி தேவை**

தொடர்பு: **075 655 1843**

**வேலைவாய்ப்புகள்**

- ➢ Clerk : 0755489898
- ➢ நிகழ்ச்சி தயாரிப்பாளர் : 0773322527
- ➢ Bill Clerk : 0777738715
- ➢ Heavy Vehicle Driver : 0771202733
- ➢ Accountant : 0776696385
- ➢ Office Incharge : 0741166057
- ➢ சமையலாளர் : 0770085277
- ➢ Administration : 0778738834
- ➢ Customer Care : 0755489898
- ➢ Social media Presenter : 0778738834
- ➢ ARSM : 0741166057
- ➢ Decoration Helper : 0777750318
- ➢ Waiter/Kitchen Helper : 0766587149
- ➢ பராமரிப்பாளர் : 0770085277
- ➢ Assistant Sales Manager (Basic 60,000) : 0779969661

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
**வேலைவாய்ப்புகளுக்கு:**
**dewmasweb.com**

**வேலையாட்கள் தேவையா? :**
**0777733368**

**DEWMAS, 51, Amman Road, Nallur**

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24, சப்பல் வீதி, 113, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சிந்துராஜன் கர்வாலோ கைம்பெண் சேவியர் கனகரட்ணம் கர்வாலோ என்றும், இல-113/1, றொசாரியோ ரைபூரியஸ் அமிர்தம் கர்வாலோ பெண் மேரி லூயிஸ் ஞானரட்னம் கர்வாலோ எனவும் ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இந்துராஜன் கர்வாலோ கைம்பெண் சேவியர் கனகரட்ணம் கர்வாலோ மற்றும் றொசாரியோ ரைபூரியஸ் அமிர்தம் கர்வாலோ பெண் மேரி லூயிஸ் ஞானரட்னம் கர்வாலோ ஆகியோர் 27.10.1976 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை முகதாவில் 245ம் இலக்கத்தில் பிரிவிடல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியிருந்தனர்.

குறித்த ஆதனத்தை இல -113, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீலியன் ரமேஷ் விக்டோரியா என்பவர் மேற்படி ஆதனம் தனது பூட்டனாரான S.M.A.விக்டோரியா 1980ல் கொள்வனவு செய்து ஆண்டனுபவித்து அவரது பிள்ளைகளும் தனது பேரன் பேத்தியுமான சேவியர் கனகரத்தினம் கர்வாலோ, சிந்துராயன் கர்வாலோ ஆகியோருக்கு நன்கொடையாக வழங்கி ஆண்டனுபவித்து வந்ததாகவும், பின்னர் இவர்களும் தனது அம்மாவின் தங்கையான மேரி லூயிஸ் ஞானரட்னம் கர்வாலோ என்பவரும் தத்தமது பங்குகளை தனது தாயாரான ரொசிட்டா விக்டோரியாவுக்கு நன்கொடை அளித்ததாகவும் குறித்த ஆதனம் இரண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்ட ஆதனங்கள் என்றும் இது தொடர்பான ஆவணங்கள் யுத்த சூழ்நிலையால் தொலைந்து விட்டதாகவும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் கிடைக்கப் பெறவில்லை எனவும் தனது தாயின் தாயார் தனது பராமரிப்பில் இறுதிக்காலம் வரை இருந்து இறந்ததாகவும் அவர் வாய்மொழி மூலம் தனக்கே வழங்கியதுடன் ஆட்சிக்குட்பட்டதும் மாதாவழி முதுசமும் எனக்கூறி 02.11.2024 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் 20130ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதன விஸ்தீரணம் தொடர்பில், ஜீலியன் ரமேஷ் விக்டோரியா அவர்கள் இவ்வாதனம் தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜாவினால் அளந்து வரையப்பட்ட 13308ம் இலக்க 2023.12.03ம் திகதிய நில அளவைப் படத்தில் 1ம் 2ம் துண்டுகளாக சுட்டப்பட்டு நிலப்பரப்பு 01 குளி 0.42 ஆக காணப்படுவதாக கூறி 14.05.2025 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமகள் இராதாகிருஷ்ணன் முகதாவில் 625ம் இலக்க தொடர்புபடுத்தி வெளிப்படுத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ் மாநகர சபை, யாழ் நகர் மேற்கு - J/73 கிராம அலுவலர் பிரிவு, கறையூர் இறை. “களிமண்குண்டு”. நிலப்பரப்பு 01 குளி 0.42ம் உடைந்த வீடும் கிணறும் அதற்குரியவைகளும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜாவினால் 2023.12.03ம் திகதி 13308ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப் படத்தில் 1ம் 2ம் துண்டுகளாக சுட்டப்பட்டுள்ளன. இந்த நிலப்பரப்பு ஒன்றும் குளி பூச்சியம் தசம் நான்கு இரண்டு (நி.பர 01 குளி 0.42) இதற்கு எல்லைகள்-

கிழக்கு - 5ம் குறுக்குத் தெரு.
வடக்கு - றோய் றெமிடியஸ் நிக்கலசினதும் மேரி எவஸ்ரா பப்சி மரியதாசனினதும் ஆதனங்கள்.
மேற்கு - மேரி எவஸ்ரா பப்சி மரியதாசனின் ஆதனம்.
தெற்கு - தேவாலய வீதி. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

தற்போது ஜீலியன் ரமேஷ் விக்டோரியா இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது ஜீலியன் ரமேஷ் விக்டோரியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர்**
**யாழ் மாநகர சபை.**

(CR 45930) A

## மீள் கேள்விகோரல் அழைப்பு
### ஆதார சித்த மருத்துவமனை, பம்பைமடு, வவுனியா. சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு வழங்கல் - 2025/2026

1. ஆதார சித்தமருத்துவமனை, பம்பைமடு, வவுனியா இனது சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு வழங்குவதற்காக சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாண பெறுகைக் குழுவினால் தகுதியான, தகமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்கலிற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம், இலக்கம்.572/3, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது ஆதார சித்தமருத்துவமனை, பம்பைமடு, வவுனியாவில் தமிழ் மொழியில் உள்ள கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500/= காசாக செலுத்தி அலுவலக நாட்களில் 29.08.2025 தொடக்கம் 12.09.2025 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
3. பெறுகைகோரப்படும் சேவைகளிற்கான வாடகைக் காலம் ஒப்பந்த திகதியிலிருந்து ஒருவருடம் ஆகும்.
4. விலைக்கேள்விகள் 15.09.2025ந்திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக “தலைவர், பெறுகைகள் குழு, சுதேசமருத்துவதிணைக்களம், வடக்கு மாகாணம், 572/3 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது திணைக்களத்தின் கணக்குப் பகுதியில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
6. பெறுகைவைப்புப் பணமாக ரூபா **5,000.00** வைப்புச் செய்யப்படல் வேண்டும். இதற்குரிய காலஎல்லையாக 15.09.2025 - 05.01.2026 வரை காணப்படும்.
7. செயலாற்றுகைப் பிணையாக **ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது சிற்றுண்டிச்சாலை வாடகைக்குரிய மூன்று மாதகால வாடகைப்பணம் செயலாற்றுகை பிணையாக செலுத்தப்படல் வேண்டும். செலுத்தப்படும் மூன்று மாதகால வாடகைப்பணம் ஒப்பந்தம் காலாவதியான பின்னேமீளளிப்புச் செய்யப்படும். எக்காரணம் கொண்டும் பிணைப்பணம் மாதவாடகையாகக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.**
8. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் சுதேசமருத்துவ திணைக்களம், வடக்குமாகாணம் **(தொலைபேசி இல. 021-222-0824)** என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**சுதேசமருத்துவ திணைக்களம்,**
**வடக்குமாகாணம்**

(CR 45933) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துஷிதவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக.29
தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துஷித ஹல்லொலுவவை செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கொழும்பு குற்றப்பிரிவு, பிரதிவாதி சட்டத்தரணிகள் முன்வைத்த உண்மைகளைப் பரிசீலித்த பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (ச-இ)

## இலவச யோகாக் கற்கை நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.29
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வரும் யோகாக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க்கந்தன் ஆலயப் பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ளமுடியும். மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்குக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன. பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்துகொள்ளலாம்.
மேலதிக தகவல்களை 0212222203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனவும் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ச-66)




யாழ்ப்பாணம், ஓக.29
வேலணை மண்கும்பான் பிள்ளையார் கோயில் சுற்றுப்புறத்தில் இருக்கும் வயற் காணிகளுக்கு விஷமிகளால் தீமூட்டப்பட்டுள்ளது.
வீசும் கடும் காற்றுக்காரணமாக இந்தத் தீ கொழுந்துவிட்டெரிந்ததனால் வீதியால் பயணிகள் செல்லமுடியாத நிலை உருவாகியதுடன் கால்நடைகளும் அசௌகரியங்களை சந்தித்தன.
இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு நடந்துள்ளது.
இதுதொடர்பாக பிரதேசசபை தவிசாளருக்கு அறியப்படுத்தியதை அடுத்து யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
சுடர்விட்டு எரிந்த தீயைத் தீயணைப்புப் படையினர் பலமணி நேரம் போராடிக் கட்டுப்படுத்தினர். பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள குறித்த பகுதிக்குப் பருவ காலங்களில் வெளிநாட்டுப் பறவைகள் அதிகளவில் வருகை தரும்நிலையில் விஷமிகளின் இந்தச் செயல் பாதகத்தை ஏற்படுத்தியுள்ளது.
எனவே இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-27.66)





யாழ்ப்பாணம் - கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம்
புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2025

திருச்சிற்றம்பலம்
திருச்சிற்றம்பலம்



மஹா கும்பாபிஷேகம்
29.08.2025 வெள்ளிக்கிழமை
காலை 08.10 - 10.15 மணிவரையுள்ள
கன்னி லக்ன சுபமுகூர்த்த வேளையில்

விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!
உண்மை, அறிவு, இன்பமே உருவாகிப் பாலில் நெய்பாகக் கலந்து உறையும் இறைவன் தன்னை மனத்தால் சிந்தித்து, வாக்கால் வாழ்த்தி, மனத்தால் வணங்கி வழிபடம் பொருட்டு எண்ணற்ற திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள் நிலையங்களே ஆலயங்கள் எனப்படும். இந்தகு ஆலயங்கள் பல நிறைந்தும், விராட்புருடனது இடை நாடி ஸ்தானம் என சந்தோக்கிய உபநிடதத்தில் புகழும் பெற்றதும், தண கைலாயம் என அழைக்கப் பெற்றதும், திருமூலநாயநாயனாரால் சிவபூமி என போற்றப்பட்ட இன் ஈழத் திருநாட்டின் சைவமும் தமிழும் தளைத்து விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடக்கே கோண்டாவில் கிழக்கில் பலாலி வீதியின் மருங்கில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் அற்புதநர்க்கன விநாயகப் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகட்கும் எஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் ஆவணித் திங்கள் 13ம் நாள் (29.08.2025) வெள்ளிக் கிழமை சுவாதி நட்சத்திரமும், ஷஷ்டித் திதியும், சித்தயோகமும் கூடிய காலை 08.10 மணி முதல் 10.15 மணிவரையுள்ள கன்னி லக்கின சுப முகூர்த்தவேளையில் தூபி அபிஷேகம், இராஜ கோர அபிஷேகம், தொடர்ந்து மஹாகும்பாபிஷேகம் நடைவழத் திருவருள் கூடியுள்ளதால் அடியவர்கள் யானரும் அத்தருணமும் அதற்கு முன்னரும் பின்னரும் நடைபெறும் கிரியாகால வையனங்களில் ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு அருட் பேறடையும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி, கோண்டாவில்.
ஆலய பரிபாலன சபை

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
MARUTHAM PAINTS DEALERS
162, MAIN STREET, NELLIADY
Dulux
VIGNESWARA PAINTS & ELECTRICALS
170, PALALY ROAD, KONDAVIL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களுக்காகவே எதிர்க்கட்சிகள் கூட்டணி

## சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்



கொழும்பு, ஒக.29

மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை களுக்குத் தீர்வு வழங்கவே எதிர்க்கட்சிகள் பரந்துபட்ட கூட்டணி அமைத்துள்ளன.

அதில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய அரசாங்கத்துக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான இயலுமை இல்லை. 40 ஆயிரம் பட்டதாரிகள் வீதியில் இருக்கின்றனர். வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய அவர்களுக்கு தொழில் வழங்கப்படவில்லை. விவசாயிகள் உரமானியம் இன்றி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். நெல் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை நிலையான விலைக்கு வழங்கமுடியவில்லை. நாட்டில் 50 சதவீதமானோர் வறுமையில் உள்ளனர் என்று தரவுகள் கூறுகின்றன. 71 சதவீதமானோர் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவைக் கோருகின்றனர். பல்வேறு துறைகளிலும் பெருமளவான பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் ஒரு பிரச்சினைக்குக்கூட அரசாங்கத்தால் தீர்வு வழங்கமுடியவில்லை. பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துச்செல்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே நாம் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றோம் - என்றார். (எ-இ)

# பெண்களின் பாதுகாப்பிலேயே அபிவிருத்தி தங்கியுள்ளது

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, ஒக.29**

**ஒவ்வொரு பெண்ணும், பெண் பிள்ளையும் பாதுகாப்பாக வாழக்கூடிய சூழலை உருவாக்கி அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதன்மூலம் நாட்டில் முழுமையான அபிவிருத்தியை அடையமுடியும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. சனத்தொகை நிதியத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்ட, 'பாலின சமத்துவத்தின் மூலம் கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துதல் அறிவின் மூலம் நாட்டின் முன்னேற்றத்தை விரைவு படுத்துதல்' என்ற தலைப்பிலான கொள்கை மற்றும் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுமையாக அபிவிருத்தியடைய பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் வேண்டும். இதை அடைவதன் மூலம், ஒட்டுமொத்த நாடும் முன்னேற முடியும். பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்தி, அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பது தேசிய முன்னேற்றத்துக்கு அவசியம் - என்றார். (ச-இ)

# அமெரிக்கப் போர்க்கப்பல் கொழும்புக்கு வருகை

கொழும்பு, ஒக.29

அமெரிக்கக் கடற்படையின் டுல்சா எனும் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலின் விஜயம் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான கூட்டாண்மையை எடுத்துக்காட்டுகிறது என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச-இ)


**மணமகள் தேவை**

1991ல் பிறந்த 7ல் சூரியன் செவ்வாய் உள்ள சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு: 076 583 0277


# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 28 . 12 . 1945



மறைவு 29 . 07 . 2025

கடந்த 29.07.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் அம்பலவாணர் கந்தசாமி

**(A.K.B. பார ஊர்தி உரிமையாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (28.08.2025) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (30.08.2025) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**நாவற்கட்டை கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**குடும்பத்தினர்.**



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 03.02.1949

ஆண்டவன் அடியில் 30.07.2025

## அமரர் சந்தானலெட்சுமி கனகரெத்தினம் (அன்னக்கிளி)

ஜனனம் மரணம் நிலையானது
இடை நடுவே பயணம் முடிவானது
மகவைத் தேடிய தாயுள்ளம்
மண்ணுக்குள்ளே
மறுபடியும் பிறப்பெடுத்து வா
தாயே

பூரணலிங்கம் குடும்பத்திலுதித்த
சூரியக் குல விளக்கே
விழியோடு வளியாகும்
செம்மையுறு வதனமதே
தேடியும் கிடைக்காத திகட்டாத
உறவழகே
நாடியும் பதறுதம்மா நாமிங்கு

சீரான வம்சத்தில் பேரெழில்
நயினையில்
பார்போற்ற வந்துதித்த பாசமலர்க்
கொடியே
மார்போடு அடித்தங்கே மனதோடு
கதறியே
மண்ணுலகை வெறுத்தாயோ
மாதவத்தாயே

அன்னக்கிளியின் வளர்ப்பினில்
செல்லமாய் வளர்ந்தோம்மா
உள்ளம் உருகியே
ஏங்கித் தவிக்கின்றோம்.
நல்லமனம் கொண்ட எங்கள்
நாதத்து வேதமே
மீண்டும் பிறப்பெடுத்து எங்கள்
வம்சத்தில் பிறக்கும் வரை
நிம்மதியாய் துயிலுமம்மா

உங்கள் ஆத்மா சாந்திபெற பிறார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபை ஊழியர்களுக்கு தன்னார்வ ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு, ஓக.29

புதிய மின்சாரச் சட்டத்தின்படி, நிறுவனத்தில் சேர விரும்பாத இலங்கை மின்சாரசபையின் ஊழியர்களுக்குத் தன்னார்வஓய்வூதியத்திட்டம்அறிமுகப்படுத்தப்படவுள்ளதுஎன்றுவலுசக்திஅமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடியால்2025இலங்கைமின்சாரசபையின் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த விதிகளின்படி, 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்காலம் கொண்ட ஊழியர்கள் கடந்த சேவைக்காலத்தில்ஒவ்வொரு12மாதங்களுக்கும்இரண்டுமாதசம்பளத்தையும், மீதமுள்ளசேவைக்காலத்தில்ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் ஒன்றரை மாத சம்பளத்தையும்பெறஉரிமைபெறுவார்கள். 10 ஆண்டுகளுக்கும் குறைவான சேவைக்காலம் கொண்ட ஊழியர்கள் கடந்த சேவைக் காலத்தில் ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் 5 மாத சம்பளத்தைப் பெற உரிமை பெறுவார்கள். மீதமுள்ள சேவைக்காலத்துக்குளந்தக்கட்டணமும் செலுத்தப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

---

## மாகாணசபைத்...

மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமை தொடர்பில் பவ்ரல் அமைப்பு நேற்று கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது. அந்தக் கலந்துரையாடலில் மஹிந்த தேசப்பிரியவும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு, எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டால், அது தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையாகவே அமையும். ஏனெனில், தேர்தலைப் பிற்போடும் நிலைப்பாட்டில் உள்ளவர்கள் அந்த ஆணைக் குழுவை நீதிமன்றத்தில் நிச்சயம் சவாலுக்கு உட்படுத்துவார்கள்.

2017ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒரு சில தந்திரமான நடவடிக்கைகளால் மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்பட்டது. இதனை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அரசியல் கட்சித் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை அப்போது எடுக்கவில்லை. அது பெரும் தவறு.

எல்லை நிர்ணயக்குழுவொன்றை மீண்டும் நியமித்தால் மாகாணசபைத் தேர்தலை இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு நடத்தமுடியாத நிலை ஏற்படும். அரச அதிகாரிகள் மற்றும் மாகாண ஆளுநர்களின் நிர்வாகத்தைக் காட்டிலும் அரசியல்வாதிகளின் நிர்வாகம் நூற்றுக்கு நூறு சதவீதம் சிறந்தது. அரசியல்வாதிகளால் இடம்பெறும் ஊழல் மோசடிகளைத் தடுக்கமுடியும். அரச அதிகாரிகள், ஆளுநர்களால் இடம்பெறும் ஊழல் மோசடிகளை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (அ-ம)

## பாதாளக்...

அதிபர் பிரியந்த தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதாளக் குழுவினருக்கு கடந்த காலங்களில் அரசியற்பாதுகாப்பு இருந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் அந்த அரசியற்பாதுகாப்பு இல்லாமல் போனதையடுத்து அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்றனர். அங்கிருந்தவாறு இலங்கையில் குற்றச்செயல்களை வழிநடத்தினர். தற்போது அவர்களைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதாளக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு வெளிநாட்டுத் தொடர்பு அவசியம். எனவே, வெளிநாட்டுத் தூதகரங்களுடன் பொலிஸார் சிறந்த உறவைப் பேணிவருகின்றனர். டுபாய், ஓமான், ரஷ்யா, பெலாரஸ் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் தலைமறைவாகி உள்ள பாதாளக் குழுவினரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

## அரசியல்வாதிகள்...

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புக் காரணமாகவே கடந்த காலங்களில் ஆயுதக் குழுக்கள் வளர்ச்சியடைந்தன. தமது இருப்புக்காகவும், வருமானத்துக்காகவும், அதிகாரங்களுக்காகவும் பல அரசியல்வாதிகள் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்திவந்தனர். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், ஆயுதக் குழுக்களின் ஆட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

எனினும், ஆயுதக் குழுக்களுக்கும் அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் இடையில் தற்போதும் தொடர்புகள் உள்ளன. இதை நாங்கள் கண்டறிந்துள்ளோம். இந்த விடயத்தில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது இடம்பெறும் சில குற்றச் செயல்களின் பின்னணியில் அரசியற் தொடர்புள்ளமையை அறிந்துள்ளோம். இந்த விடயம் தொடர்பில் புலனாய்வு அறிக்கைகள் கிடைத்துள்ளன. அந்த அறிக்கைகளுக்கு அமைய முழுமையான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (அ-ம-44)

## வெள்ளை...

வெளியிடவேண்டும் என்று வலியுறுத்தி, மக்கள் பேரவை இயக்க உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மதகுருக்கள், சிவில் அமைப்புகள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று நீதியமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் வரவுள்ளது. இது தொடர்பில் வெளிப்படையான நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு மக்கள் பேரவை இயக்கத்தினர் நீதி அமைச்சரிடம் தங்களின் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர். (அ-ம-44)

## 8 என்புத்...

36ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 8 என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத்தொகுதிகளில் 6 என்புத்தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 177 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 164 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## சான்றுப்...

டது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு, நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களை பொது மக்கள் அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும், அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் தேவை என்றும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதி, வழக்கை நவம்பர் மாதம் 6ஆம் திகதிக்குத் தவணையிட்டார். (அ-ம)

## யாழ். நகர்ப்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். தொழில் நிமித்தம் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் தங்கியிருந்த அவர், நேற்று முன்தினம் உறக்கத்துக்குச் சென்ற நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கடுமையான...

யாழ்ப்பாணம் - கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த கோபாலன் குண்டுமணி (வயது-84) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மூங்கிலாறு பகுதியில் தங்கியிருந்து சிறுகைத்தொழில் செய்துவந்த நிலையிலேயே அவர் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்ட நீதவான் சடலத்தை நேரடியாகப் பார்வையிட்டதைத் தொடர்ந்து, சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-19)

## 111...

குடும்பத்தினரின் முழுமையான நிதிப் பங்களிப்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன், யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் சா.சுதர்சன் ஆகியோரின் நேரடி ஒருங்கிணைப்பில் இந்தத் திருமண வைபவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த இணையர்கள் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். (அ-ம-17-66)

## கைதான...

யான வயோதிபர் தனது 41 ஆயிரம் சுவிஸ் பிராங் நோட்டுகளை தனது வீட்டில் வைத்திருந்துள்ளார். சில தினங்களுக்கு முன்னர் பார்த்தபோது அவை காணாமற்போயிருந்தன. இதுதொடர்பில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அந்த வீட்டில் வேலை செய்தவர் உள்ளிட்ட 9 சந்தேகநபர்களை கைது செய்ததுடன் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேற்படி சுவிஸ் பிராங்கை பகுதி பகுதியாகத் திருடி ஆடம்பரச் செலவு செய்தமை தெரியவந்தது. அவர்கள் கைதுசெய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே, அனைவரையும் எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

திருடப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தொலைபேசி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## காணாமல்...

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதை இலக்காகக்கொண்டு இயங்கிவரும் உறவுகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் துறைசார் குழு விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறிய வேண்டியது மிகமுக்கியமான விடயமாகும். ஆனால், அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடுவோரும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இலங்கையில் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த விடயம்தொடர்பில்எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளோம் - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனியார் பேருந்துகளுடன் கூட்டு நேர அட்டவணையில் பேருந்துகளை இயக்கும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கைப் போக்குவரத்து சபையின் பல தொழிற்சங்கங்கள் நேற்று அதிகாலை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. இந்தநிலையில் அதற்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-20)

# யாழ். பல்கலைக்கழகத்தில் குறுந்திரைப்படங்கள் திரையிடல்

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படங்கள் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு திரையிடப்படவுள்ளன.

போர்ச்சூழலில் தனது மகனைப் பாதுகாக்கப் போராடும் ஒரு தந்தையின் பாசப் போராட்டத்தைத் தாங்கி நிற்கும் 'நான்காம் போர்', நாட்டின் நிலைமை காரணமாகப் பல ஆண்டுகளாகத் தனது மகளைக் காணாமலிருந்த ஒரு தந்தையின் பரிதவிப்பை வெளிப்படுத்தும் 'அன்பின் நிழல்', அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை மையப்படுத்திய 'லிசா', கணவன் இன்றி தன் மகளோடு வாழும் ஒரு பெண் எவ்வாறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகிறாள் என்பதைச் சொல்லும் 'கம்பளிப் பூச்சி', 2019 ஆம் ஆண்டு நடந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட ஒரு முஸ்லிம் மதகுரு பற்றிய உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, இணக்கத்தையும் சமத்துவத்தையும் எடுத்துக்கூறும் நோக்கில் தயாரிக்கப்பட்ட 'ஆஸ் ஏ தேர்ட் பேர்சன்', ஒரு தாயின் கனவுகளைச் சொல்லும் 'சப்பாத்து', ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஒரு தாய் அனுபவிக்கும் வலிகளையும் வேதனைகளையும் கூறும் 'அந்தக் கணம்', மலையகத்தில் ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் 'வேட்கை', காணாமல் ஆக்கப்பட்ட ஒரு போராளியின் குடும்பம் எதிர்கொள்ளும் அவலங்களின் கதையான 'கணையாழி', மனிதர்களின் வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக அமையும் போது, வெவ்வேறு தேவைகளுடைய இரு மனிதர்கள் ஒன்றாகச் சந்திக்கும் கதையான 'டிப்ரன்ட்' ஆகிய குறுந்திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. இந்நிகழ்வில் பங்கேற்று இக்குறுந்திரைப்படங்களைக் கண்டுகளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (25,20)

**மாகாணமட்டத் தடகளப் போட்டிகள்**

# 5 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் குவித்தது ஸ்கந்தவரோதயக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஓக.29

16ஆவது வடமாகாண தடகளப் போட்டிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் 5 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் பெற்றதோடு இரு 4 ஆம் இடங்களைப் பெற்று மொத்தமாக14 நிகழ்ச்சிகளில் தேசியமட்டப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

12 வயது ஆண்கள் பிரிவு ஆர்.சாருஜன் 60மீற்றர் ஓட்டத்தில் 2ஆம் இடம், 100 மீற்றர் ஓட்டத்தில் 3 ஆம் இடம் பெற்றார். 12 வயது 4×50மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் கே.யுபின்சிகன், ஆர்.வினுயன், எஸ்.அட்சயவதனன், ஆர்.சாருஜன் ஆகியோர் அடங்கிய குழு 2ஆம் இடம் பெற்றது. 16 வயது ஆண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் எம்.மயூரிகன் முதலாம் இடத்தையும், 18 வயது ஆண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் என்.நிதன்றாஜ் முதலாம் இடத்தையும், 20 வயது ஆண்கள்பிரிவு கோலூன்றிப்பாய்தலில் ந. டான்ஸ்சன் முதலாம் இடத்தையும், 18 வயது ஆண்கள் பிரிவு குண்டு போடுதலில் அ.போல்நியூலியன் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

16 வயது பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் பி. வைஸ்ணவி முதலாம் இடத்தையும், கோலூன்றிப்பாய்தலில் 2ஆம் இடத்தையும், 100மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்றார். 18 வயது பெண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் எஸ்.சகானா 3 ஆம் இடத்தைப் பெற்றார். 20 வயது பெண்கள் பிரிவு 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் ப.அபிஷாகினி முதலாம் இடத்தையும் 400 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றார். இந்த போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றன. (ச-25)

# அமரர் வி.தர்மலிங்கம் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.29

உடுவில், மானிப்பாய்த் தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு தாவடியிலுள்ள அன்னாரின் நினைவுத்தூபியருகே எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. ஓய்வுபெற்ற தபாலதிபர் முருகேசு சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் நினைவுப்பேருரையாற்றுவார். அன்னாரின் புதல்வர் த.சித்தார்த்தன் நன்றியுரையாற்றுவார். (ச-25)

**கடை வாடகைக்கு**

சுன்னாக புத்தூர் பிரதான வீதியில் நிலாவரை கிணற்றுக்கு அருகாமையில் 45 அடி அகலமுடைய புதிதாக கட்டப்பட்ட இரு கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 076 433 6316
077 821 0199

(CS 59251) E

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.

தொடர்பு : Whatsapp : 0044 740 537 3526

(CS 59217) E

**மணல் விற்பனைக்கு**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

அல்லது

- தென்மராட்சி 50,000,
- யாழ்மாவட்டம் 55,000
- வடமராட்சி 58,000

விநியோகிக்கப்படும்.

தொடர்பு:- 076 324 9977

# ஓவியர் சு.நிர்மலவாசனின் 'கெத்சமனி' காண்பியக் காட்சி

மட்டக்களப்பு, ஓக.29

ஓவியத் தாபனக் கலையாக்கங்களில் ஈடுபட்டுவரும் ஓவியச் செயற்பாட்டாளரான சு.நிர்மலவாசனின் 15ஆவது தனிநபர் ஓவியத் தாபனக் காண்பியக் கலைக் காட்சி 'கெத்சமனி' எனும் தலைப்பில் மட்டுநகர் புனித மிக்கேல் கல்லூரியிலுள்ள சிற்றாலய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முதல் செப்டெம்பர் 1ஆம் திகதி வரை மூன்று நாள்களுக்கு காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. இந்தக்காண்பியக்கலைக்காட்சி மட்டுநகர் புனித மிக்கேல் கல்லூரியின் பழையமாணவர் தாய்ச் சங்கத்தினதும், மூன்றாவதுகண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழுவினரதும் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கைத் தீவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் விளைவுகளை பற்றி முன்வைப்பதாக இக்காண்பியக் கலைக்காட்சி ஆக்கம் செய்யப்பட்டுள்ளது.

பிரதிமை ஓவியங்கள் எனும் நுட்பத்தை மையமாகக்கொண்டு போர்க்காலத்தில் ஒடுக்கப்பட்ட மனிதர்களின் குரலாக ஒலித்த கத்தோலிக்கக் குருவானவர்க ளின் கதைகளையும், 2000ஆம் ஆண்டில் வெசாக் தினத்தன்று மட்டுநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட மறைக்கல்வி வகுப்புச் சிறார்களின் கதைகளையும் மீளவும் நினைவுக்குக் கொண்டு வந்து போரினால் பாதிக்கப்பட்டு வாழும் மனிதர்களை ஆற்றுப்படுத்திப் போருக்கு எதிரான குரலை ஒரு கலைஞனுக்கேயுரிய தார்மீக அறத்துடன் ஓங்கி ஒலிக்கும் வகையில் இக்காட்சி திட்டமிடப்பட்டுள்ளது. (ச-25)

# நூல் அறிமுகமும் விமர்சனமும்

யாழ்ப்பாணம், ஓக.29

மூத்த எழுத்தாளரும், விமர்சகருமான குருநகரைச் சேர்ந்த அ.யேசுராசா எழுதிய 'பனை மீன் நாடன் பக்கம்' எனும் கலை இலக்கியப் பத்தி எழுத்துகளின் தொகுப்பு நூலின் அறிமுகமும் விமர் சனமும் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் அம்மன் வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் மூத்த எழுத்தாளர் வடகோவை வரதராஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆசிரியரும், விமர்சகருமான சி.ரமேஸ் அறிமுக உரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி.கந்தையா ஸ்ரீ கணேசன், கலாநிதி. தி.செல்வமனோகரன் ஆகியோர் விமர்சன உரைகளையும் ஆற்றுவர். இறுதியாக நூலாசிரியர் ஏற்புரையையும், நன்றி உரையையும் நிகழ்த்துவார். (ச-66)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.